


இன்றைய செய்தி நாளைய வரலாறு

# முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

ஞாயிற்றுக்கிழமை 28-05-2023


# லீ குவான் யூ புகழ் வாழ்க!

**தமிழ், தமிழ்நாட்டின் மேன்மைக்காக உழைத்த தமிழர்களுக்கு சிறப்புச் செய்வதைப் போலவே - இதே நோக்கம் கொண்டு செயல்பட்ட தமிழரல்லாதவர்களையும் சிறப்புச் செய்து வருகிறார் மாண்புமிகு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள். பூஜ்யமாக இருந்த சிங்கப்பூரை ராஜ்யமாக ஆக்கியவர் என்று போற்றப்படுபவர் லீ குவான் யூ அவர்கள். அதேநேரத்தில் அங்கு வாழும் தமிழ் மக்களுக்கு அனைத்து உரிமைகளையும் பாதுகாப்பையும் வழங்கி தமிழ் மொழியின் மேன்மைக்கும் அடித்தளம் இட்டவர் அவர்.**

தொழில் வளர்ச்சிக்கான தனது பயணத்தை சிங்கப்பூரில் மேற்கொண்ட தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், லீ குவான் யூக்கு தமிழ்நாட்டில் சிலையும், அவர் பெயரால் நூலகமும் அமையும் என்று செய்த அறிவிப்பைக் கேட்டதும், அரங்கம் அதிர தமிழர்கள் அனைவரும் கைதட்டியபடியே இருந்தார்கள்.

**“சிங்கப்பூரின் தந்தை என்று போற்றப்படும் லீ குவான் யூ அவர்களால்தான் தமிழர்களும் தமிழும் இங்கு உயர்வை அடைந்தது. நம்முடைய பேரறிஞர் அண்ணா அவர்களின் பேச்சால் ஈர்க்கப்பட்டவர் லீ குவான் யூ அவர்கள்.**

**சிங்கப்பூரில் அண்ணாவின் உரையைக் கேட்ட லீ குவான் யூ அவர்கள் பேரறிஞர் அண்ணாவை, தனது மூத்த சகோதரர் என்று பாசத்தோடு குறிப்பிட்டார். தனது அலுவலகத்துக்கு அண்ணா அவர்களை அழைத்து விருந்து கொடுத்தார். அதனால்தான் லீ குவான் யூ இறந்த போது ‘சிங்கப்பூரின் நாயகன்’ என்று போற்றினார் தலைவர் கலைஞர் அவர்கள். அத்தகைய லீ குவான் யூவுக்கு தமிழ்நாட்டில் நினைவுச் சின்னம் எழுப்ப முடிவு செய்துள்ளோம். எனவே லீ குவான் யூ பெயரால் நூலகமும் சிலையும் மன்னார்குடியில் அமையும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்” என்று அறிவித்திருக்கிறார் முதலமைச்சர் அவர்கள்.**

சிங்கப்பூரின் பிரதமராக இருந்தவருக்கு இன்னொரு நாட்டில் சிலை அமைக்கப்படுவது இதுவே முதல் முறையாகக் கூட இருக்கக் கூடும். அத்தகைய பெருமைக்குரியவர் தான் லீ குவான் யூ அவர்கள்.

சிங்கப்பூரில் ஆட்சி மொழியாக இருக்கும் ஒரே இந்திய மொழி தமிழ் மொழிதான். தமிழை ஆட்சி மொழியாகக் கொண்ட மூன்று நாடுகளில் சிங்கப்பூரும் ஒன்று. (இந்தியா, இலங்கை, சிங்கப்பூர் ஆகிய மூன்றும் தமிழ் ஆட்சி மொழியாக இருக்கும் நாடுகள்) சிங்கப்பூர் கல்வி அமைச்சின் இருமொழித் திட்டத்தின்படி தமிழ் இரண்டாம் மொழிப்பாடமாக அனைத்துப் பள்ளிகளிலும் இருக்கிறது. தொடக்க காலத்தில் தமிழ்நாட்டில் இருந்து தமிழ் கற்பிக்க ஆசிரியர்களை அழைத்துச் சென்றார்கள். இப்போது அங்குள்ள தேசிய ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியிலேயே கற்பிக்கப்பட்டு தமிழ் ஆசிரியர்கள் தேர்வு செய்யப்படுகிறார்கள். சிங்கப்பூர் தேசியப் பல்கலைக் கழகமும் தமிழ் ஆராய்ச்சிக் கழகமும் இணைந்து இளங்கலை மற்றும் முதுகலைப் பட்டங்களை தமிழில் வழங்குகிறது.

அரசு அலுவலகங்களின் பெயர்ப் பலகைகளில் தமிழைப் பார்க்கலாம். அறிவிப்புகளில் தமிழைக் கேட்கலாம். நாடாளுமன்றத்தில் தமிழில் பேசலாம். அரசு அலுவலகக் கோப்புகளில் தமிழைக் காணலாம். விமானச் சேவைகளில் தமிழ் முக்கிய இடம் பெற்றுள்ளது. தமிழ் நிகழ்ச்சிகளை சிங்கப்பூர் அரசே நிகழ்த்துகிறது. தமிழ் இதழ்கள், வானொலிகள், தொலைக்காட்சிகள் அதிகம் உள்ளன. சிங்கப்பூர் நாணயத்திலும் தமிழ் உள்ளது. நூலகத்தில் தனித்தனிப் பிரிவுகளில் தமிழ் நூல்கள் இடம்பெற்றுள்ளன. இப்படி எங்கும் தமிழ், எதிலும் தமிழ் என இருக்கும் நாடாக சிங்கப்பூர் இருக்கிறது. இதனைக் கட்டமைத்தவர் லீ குவான் யூ அவர்கள்.

சிங்கப்பூர் குடியரசின் முதல் பிரதமர் லீ குவான் யூ. சிங்கப்பூர் மக்கள் செயல் கட்சியின் நிறுவனர்களில் ஒருவர். இந்தக் கட்சி 1954 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. அக்கட்சியை 1959 முதல் 1990 வரை 7 முறை வெற்றி பெற வைத்தவர் இவர். இந்தக் காலக்கட்டத்தில் இவரே பிரதமராகவும் இருந்தார். 2004-2011 ஆகிய காலக்கட்டத்தில் Minister Mentor பதவியில் பணியாற்றினார். 2015 ஆம் ஆண்டு மறைந்தார். சிங்கப்பூரை பொருளாதார ரீதியாகக் கட்டி எழுப்பியவர் லீ குவான் யூ என்பதை அனைவரும் அறிவார்கள். பொருளாதார மேம்பாட்டை அடைந்த நாடுகள் எத்தனையோ உண்டு. அதனால் சிங்கப்பூரின் பொருளாதார வளர்ச்சிக்காக மட்டுமே லீ குவான் யூ-வைப் போற்றுவதில்லை.

**ஒரு நாட்டின் பன்முகத்தன்மையை வளர்ப்பதன் மூலமாக மட்டுமே அந்த நாட்டை அனைத்து வகையிலும் வளர்க்க முடியும் என்று சிந்தித்து வளர்த்தவர் லீ குவான் யூ.**

அவர் மறைந்த போது தமிழ்நாட்டில் தஞ்சை மாவட்டத்திலும், தென் மாவட்டங்களிலும் படம் வைத்து அஞ்சலி செலுத்தியது எதற்காக? அவருக்கு தமிழ்நாட்டின் மன்னார்குடியில் சிலையும் நூலகமும் அமைக்கப்படும் என்று தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிவிப்பது எதற்காக?

தொடக்க காலத்தில் சோசலிச, பொதுவுடைமைச் சிந்தனையாளராகவே தன்னை அவர் அடையாளப்படுத்திக் கொண்டார். தொழிற்சங்க வழக்குகளில் அதிகம் வாதாடினார். இடதுசாரி மாணவர் அமைப்புகளின் போராட்டங்களை ஆதரிப்பவராக இருந்தார். தேசிய இனங்களின் பிரச்சினையை உள்வாங்கி இருந்தார். தனது நாடு பெரும்பான்மை இனவாதத்தில் சிக்கிவிடக் கூடாது என்பதில் தெளிவாக இருந்தார். பல்வேறு இனம், மொழி, மத மக்கள் வாழும் நாட்டில் அனைவருக்கும் சம வாய்ப்பு கொடுக்கவில்லை என்றால் அதனால் எழும் போராட்டங்களே அந்த நாட்டின் வளர்ச்சியைத் தடுக்கும் என்று நினைத்தார். அவருக்கு அண்மை நாடான இலங்கையின் சூழலானது இதனை உணர்த்துவதாக இருந்தது. பெரும்பான்மை சிங்கள இனவாதம், அந்த நாட்டைச் சிதைத்தது போன்ற சூழல் இங்கும் ஏற்படக் கூடாது என்பதில் உறுதியான முடிவை எடுத்தார்.

அனைத்துத் தரப்பினருக்கும் ஜனநாயக சுதந்திரத்தை வழங்குவதன் மூலமாக நாட்டைக் கட்டமைக்க முடியும் என்று மிகத் தெளிவாகக் கருதினார் லீ குவான் யூ. தனிச் சிங்களச் சட்டம் கொண்டுவந்ததன் மூலமாக இலங்கையில் மிகப்பெரிய கலவரங்கள் தொடங்கிய 1956 ஆம் ஆண்டுதான் லீ குவான் யூ முதன்முதலாக இலங்கைக்குச் சென்றிருந்தார். அந்தக் காட்சிகள்தான் அவரது பன்முக அரசியலை உள்வாங்கும் மனதை உருவாக்கியது.

தொடக்கத்தில் சீனமொழி நாடாக சிங்கப்பூரை ஆக்க சிலர் முயற்சிகள் மேற்கொண்டார்கள். அதனைத் தடுத்தார் லீ குவான் யூ. ஆங்கிலத்தை அலுவலக மொழியாக ஆக்கினார். அதன் மூலமாக அனைத்து மொழியினரையும் இணைத்தார். அனைவரையும் உள்ளடக்கிய வெற்றி இதன்மூலம்தான் சாத்தியமானது.

**அனைத்து இன, மொழியினரையும் உள்ளடக்கிய வளர்ச்சியின் மூலமாக சிங்கப்பூரை உருவாக்கி - உலக நிர்வாக நெறிமுறைகளின் தந்தையாகத் திகழும் லீ குவான் யூ புகழ் வாழ்க!**



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (26.05.2023) ஜப்பான் நாட்டின், ஒசாகா மாகாணத்தில், ஜப்பான் நாட்டைச் சேர்ந்த டைசல் சேஃப்டி சிஸ்டம்ஸ் (Daicel Safety Systems) நிறுவனத்தின் வணிக இயக்கப்பிரிவு தலைவர் கென் பாண்டோ அவர்களை சந்தித்து, சென்னையில் 2024 ஜனவரி மாதம் நடைபெறவுள்ள உலக முதலீட்டாளர்கள் மாநாட்டில் கலந்து கொள்ள அழைப்பு விடுத்தார். இச்சந்திப்பின்போது தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் எஸ். கிருஷ்ணன், தமிழ்நாடு வழிகாட்டி நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் வே.விஷ்ணு, ஒசாகாவிற்கான இந்தியத் தூதர் நிகிலேஷ் கிரி, டைசல் நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் சிஹிரோ அவோகி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

### தமிழ்நாட்டின் மீனவக் குடும்பங்களுக்கு

# மீன்பிடி தடைக்கால நிவாரணத் தொகை ரூ.5000 வழங்கல்!

## தமிழ்நாடு அரசு நிதி ஒப்பளிப்பு வழங்கி ஆணை!

சென்னை, மே 28-

கடல் மீன்வளத்தைப் பேணிக் காத்திட, தமிழ்நாட்டில் ஒவ்வொரு ஆண்டும் கிழக்குக் கடற்கரை பகுதியில் ஏப்ரல் 15ஆம் நாளன்று தொடங்கி ஜூன் 14ஆம் நாள் வரையிலும், மேற்கு கடற்கரை பகுதியில் ஜூன் 1ம் நாளன்று தொடங்கி ஜூலை 31ஆம் நாள் வரையிலும் 61 நாட்களுக்கு மீன்பிடி தடைக்காலம் அமல்படுத்தப்பட்டு வருகிறது.

மீன்பிடி தடைக்காலத்தின் போது மீன்பிடி விசைப்படகுகள்/ இழுவலைப்படகுகளில் மீன்பிடிப்பு செய்யும் பணியாளர்கள் மற்றும் முழுநேர மீன்பிடிப்பினை சார்ந்த மீனவ குடும்பங்கள் முற்றிலுமாக தொழிலின்றி வாழ்வாதாரம் பாதிக்கப்படுவதால் மீனவர்கள் தங்களது குடும்பத்தினை சிரமமின்றி நடத்திச் செல்ல குடும்பம் ஒன்றுக்கு தலா ரூ.5000 வீதம் மீன்பிடி தடைக்கால நிவாரணம் வழங்கப்படுகிறது.

நடப்பாண்டிற்கான (2023ஆம் ஆண்டு) மீன்பிடி தடைக்காலத்தில் தமிழகத்தில் உள்ள 14 கடலோர மாவட்டங்களில் உள்ள 1.79 இலட்சம் மீனவ குடும்பங்களுக்கு மீன்பிடிதடைக்கால நிவாரணத் தொகை ரூ.5000 வீதம் வழங்கிடும் பொருட்டு ரூபாய் 89.50 கோடி அரசு நிதி ஒப்பளிப்பு வழங்கி ஆணையிட்டுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் 14 கடலோர மாவட்டங்களை சேர்ந்த மீனவ குடும்பங்களுக்கு மீன்பிடி தடைக்கால நிவாரண தொகை நேற்று முன்தினம் (26.05.2023) முதல் பயனாளிகளின் வங்கிக் கணக்கில் வரவு வைத்திடும் பணிகள் துவங்கப்பட்டுள்ளன.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (26.05.2023) ஜப்பான் நாட்டின், ஒசாகா மாகாணத்தில் ஜப்பான் நாட்டின் பல்வேறு நிறுவனங்களின் முதன்மை அலுவலர்களுடனான மதிய உணவுடன் கூடிய சந்திப்பு நிகழ்வில், ஒசாகா மாகாணத்தின் துணை ஆளுநர் நோபுஹிகோ யமாகுஜி அவர்களை (Osaka Province Vice Governor Mr.Nobuhiko Yamaguchi) மரியாதை நிமித்தம் சந்தித்துப் பேசினார்.

### மாநிலத்திற்கு முதலீடுகளை ஈர்க்கவே வெளிநாடு சுற்றுப்பயணம்!

# முதல்வரின் பயணத்திட்டத்தை கொச்சைப்படுத்துவதா?

## எடப்பாடிக்கு - தமிழ்நாடு காங்கிரஸ் கட்சித் தலைவர் கே.எஸ்.அழகிரி கண்டனம்!

**சென்னை, மே 28-**

**தமிழ்நாட்டிற்கு தொழில் முதலீடுகளை ஈர்க்கவே முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளிநாடு சுற்றுப்பயணம் மேற்கொண்டிருக்கிறார். முதல்வரின் பயணத் திட்டத்தை எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி கொச்சைப்படுத்துவதா என்று தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் கே.எஸ்.அழகிரி கண்டனம் தெரிவித்துள்ளார்.**

அவரது அறிக்கை வருமாறு:

தாழ்ந்த நிலையிலும், கடுமையான கடன் சுமையிலும் சிக்கியிருந்த தமிழ்நாட்டை மீட்டெடுத்து வளர்ச்சிப்பாதையில் அழைத்துச் செல்வதற்கான முயற்சிகளை கடந்த 2 ஆண்டுகளாக தமிழகத்தின் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் பல்வேறு நிலைகளில் எடுத்து வருகிறார். தேர்தல் நேரத்தில் கொடுத்த வாக்குறுதிகளில் பெரும்பாலானவற்றை நிறைவேற்றுவதில் முனைப்பு காட்டி சாதனை படைத்து வருகிறார். இந்நிலையில் தமிழ்நாட்டின் பொருளாதாரத்தை 2030 -31 ஆம் நிதியாண்டுக்குள் ஒரு ட்ரில்லியன் அமெரிக்க டாலர் அளவுக்கு உயர்த்துவதை நோக்கமாகக் கொண்டு தமிழ்நாடு அரசு செயல்பட்டு வருகிறது.

உலக முதலீட்டாளர்கள் மாநாடு அடுத்த ஆண்டு ஜனவரி மாதம் தமிழ்நாட்டில் நடைபெறவுள்ளது. இதில் சிங்கப்பூர் மற்றும் ஜப்பான் தொழிலதிபர்களை பங்கேற்கச் செய்யவும், புதிய முதலீடுகளையும், புதிய தொழில் நுட்பங்களையும் கொண்டு வர முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையிலான குழுவினர் ஒன்பது நாள் அரசுமுறை பயணம் மேற்கொண்டதை கொச்சைப்படுத்துகிற வகையில் அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி விமர்சனம் செய்திருப்பதை வன்மையாக கண்டிக்கிறேன்.

கடந்த அ.தி.மு.க. ஆட்சிக் காலத்தில் ஜெயலலிதா முதலமைச்சராக இருந்தபோது ரூ. 100 கோடி செலவில் 2015 இல் உலக முதலீட்டாளர்கள் மாநாடு மிகுந்த கோலாகலத்துடன் ஆடம்பரமாக நந்தம்பாக்கத்தில் நடைபெற்றது. அதில் ரூ.2.42 லட்சம் கோடி முதலீட்டில் 98 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் போடப்பட்டு 4.69 லட்சம் பேருக்கு வேலை வாய்ப்பு வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது. அதே போல இரண்டாவது உலக முதலீட்டாளர்கள் மாநாட்டை அன்றைய முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமி நடத்தி புரிந்துணர்வு ஒப்பந்தங்களும், அறிவிப்புகளும் வெளி வந்தன. ஆனால் கடந்த 10 ஆண்டுகால அ.தி.மு.க. ஆட்சிக்காலத்தில் அகில இந்திய அளவில் நாட்டிற்கு வந்த மொத்த முதலீடுகளில் தமிழகத்திற்கு வந்தது வெறும் 0.79 சதவீதம் தான்.

அ.தி.மு.க. ஆட்சியில் முதலீட்டிற்கு உகந்த மாநிலம் தமிழகம் இல்லை என்ற நிலையில் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் போட்ட பல நிறுவனங்கள் வேறு வேறு மாநிலங்களுக்குச் சென்றுவிட்டதை



எவரும் மறுக்க முடியாது. இதற்கு காரணம் அ.தி.மு.க. ஆட்சியில் நிலவிய ஊழலும், நிர்வாகச் சீர்கேடும் தான் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

ஆனால் தமிழ்நாட்டில் முதலமைச்சராக மு.க. ஸ்டாலின் பொறுப்பேற்ற பிறகு கடந்த 2 ஆண்டுகளில் தமிழ்நாட்டில் பல்வேறு துறை சார்ந்த முதலீட்டு ஊக்குவிப்பு நிகழ்வுகளை நடத்தி இதுவரை 226 திட்டங்களுக்கான புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்பட்டுள்ளன. இதன்மூலம் ரூ.2 லட்சத்து 95 ஆயிரத்து 339 கோடி அளவுக்கு முதலீடு கள் உறுதி செய்யப்பட்டுள்ளன. ரூ. 4 லட்சத்து 12 ஆயிரத்து 565 நபர்களுக்கு வேலைவாய்ப்பும் உறுதியளிக்கப்பட்டுள்ளது.

அகில இந்திய அளவில் மத்திய ரிசர்வ் வங்கி வெளியிட்ட புள்ளி விவரத்தின் படி 2022-23 ஆம் நிதியாண்டில் 10 ஆண்டுகளில் இல்லாத அளவிற்கு அந்நிய முதலீடு 16.3 சதவீதம் குறைந்திருப்பதாக கூறுகிறது. இந்தியாவில் தொழில் துறை வளர்ச்சி பெறவும், வேலை வாய்ப்பு பெருகுவதற்கு மாறாக, பொருளாதார பேரழிவிற்கு வழிவகுக்கும் பல்வேறு நடவடிக்கைகளை பிரதமர் மோடி அரசு எடுத்து வருகிறது. இதற்கு சமீபத்திய உதாரணம் ரூ.2000 நோட்டு புழக்கத்தில் இருந்து நீக்கப்பட்டதாகும். இதனால் 6 கோடி சிறு, குறு தொழில்களும் 11 கோடி விவசாயிகளும் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளதை கண்கூடாகப் பார்க்கிறோம். இத்தகைய பின்னணியில் தமிழ்நாட்டிற்கு அதிக அந்நிய முதலீடுகளை ஈர்ப்பது என்பது சாதாரண விஷயம் அல்ல. மிகுந்த ஈடுபாட்டோடு, பல தடைகளை கடந்து அந்நிய முதலீடுகளை ஈர்க்கத் திட்டமிட்டுச் செயலாற்றி வருகிற தமிழக முதலமைச்சரை பாராட்டுகிறேன்.

உலகமே வியந்து போற்றுகிற அற்புதமான நாடாளுமன்ற கட்டிடம் கடந்த 75 ஆண்டுகளாக இயங்கி வருகிற நிலையில் புதிய நாடாளுமன்ற கட்டிடத்தை மிக அருகாமையிலேயே ரூ. 850 கோடிக்கு மேலாக செலவிட்டு கட்டுவது துக்ளக் ஆட்சியைத் தான் நினைவு படுத்துகிறது. துக்ளக் ஆட்சியில் தலைநகர் மாற்றப்பட்டது. ஆனால் நவீன துக்ளக் ஆக செயல்பட்டு வருகிற மோடி ஆட்சியில் நாடாளுமன்றம் மாற்றப்பட்டிருக்கிறது.

புதிய நாடாளுமன்றக் கட்டிடத்திற்கான திறப்பு விழாவிற்கு பழங்குடி இனத்தைச் சேர்ந்த பெண் குடியரசு தலைவர் திரௌபதி முர்மு அழைக்கப்படாமல் புறக்கணிக்கப்பட்டிருக்கிறார். ஏற்கனவே கடந்த 2020 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் நடைபெற்ற புதிய நாடாளுமன்றக் கட்டிடத்திற்கான அடிக்கல் நாட்டு விழாவிற்கு அன்றைய குடியரசு தலைவர் ராம்நாத் கோவிந்த் அழைக்கப்படவில்லை. நாட்டின் மிக உயர்ந்த பதவிகளுக்கு தலித், ஆதிவாசிகளை நியமித்ததாக தம்பட்டம் அடித்துக்கொண்ட பிரதமர் மோடி, அவர்களை அழைக்காமல் அவமானப்படுத்தியிருக்கிறார். இதன் மூலம் மோடியின் சுயரூபத்தை அனைவரும் அறிந்துகொள்ளலாம்.

புதிய நாடாளுமன்ற கட்டிட திறப்பு விழாவிற்கான தேதி மே 28. அந்த தேதியை தேர்வு செய்ததற்கான காரணம் அன்று தான் சாவர்க்கர் பிறந்தநாள். இந்திய விடுதலை போராட்டத்தில் ஈடுபட்டு அந்தமான் சிறையில் அடைக்கப்பட்டிருந்த சாவர்க்கர் பிரிட்டிஷ் ஆட்சிக்கு எதிராக எவ்வித செயலிலும் ஈடுபட மாட்டேன் என்று உறுதி கூறி, மன்னிப்பு கடிதம் எழுதி, சிறையில் இருந்து விடுதலை ஆனவர். இதன்மூலம் இந்திய விடுதலைப் போராட்டத்தை கொச்சைப்படுத்திய சாவர்க்கரின் பிறந்தநாளில் புதிய நாடாளுமன்றக் கட்டிடத்தை திறப்பதை விட இந்திய மக்களுக்குச் செய்கிற துரோகம் வேறு எதுவும் இருக்க முடியாது.

இவ்வாறு கே.எஸ்.அழகிரி அறிக்கையில் தெரிவித்துள்ளார்.



சென்னை தெற்கு மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளரும், சென்னை மாநகராட்சி 176வது வார்டு மாமன்ற உறுப்பினருமான வேளச்சேரி வே.ஆனந்தம் – ரேவதி ஆனந்தம் ஆகியோரின் புதல்வி வே.ஆ.அபிநயா – லோ.ஹரிஹரன் ஆகியோரின் திருமணம் சிவகங்கை மாவட்டம் – தேவகோட்டையில், 25.5.2023 அன்று நடைபெற்றது. மணவிழாவை – கழக இளைஞர் அணிச் செயலாளரும் – இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நடத்தி வைத்து, மணமக்களை வாழ்த்தி உரையாற்றினார். இம்மணவிழாவில் – கூட்டுறவுத் துறை அமைச்சர் கே.ஆர். பெரியகருப்பன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி, சுற்றுச்சூழல் துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன், இராமநாதபுரம் மாவட்டக் கழகச் செயலாளர் காதர்பாட்சா முத்துராமலிங்கம் எம்.எல்.ஏ. மற்றும் ஏராளமான கழக முன்னணியினர், நிர்வாகிகள் பங்கேற்று மணமக்களை வாழ்த்தினர்.